## பனிக்காலத்திலும் பணம் பார்க்கலாம்…!

## 10.04.2013

**பசுமைக் குடில் + இயற்கை இடுபொருள்… மல்லிகை சாகுபடிக்கு கை கொடுக்கும் ஃபாகர்..**



ஊரெல்லாம் செய்யும் மாதிரிதான் நானும் விவசாயம் செய்கிறேன். ஆனால், வருமானம் மட்டும் வர மாட்டேன் என்கிறதே என்று சொல்லிக் கொண்டிருக்காமல்.. இருப்பதை வைத்து வருமானம் பார்க்கும் வழி என்ன? என யோசித்து, புதுமைகளைப் புகுத்தி சாதனை படைக்கும் விவசாயிகளும் நம்மிடையே இருக்கத்தான் செய்கிறார்கள்.

அந்த வகையில், வழக்கமான விவசாய முறையிலிருந்து கொஞ்சம் மாற்றி சிந்தித்தால்.. மணமான வருமனாம் பார்த்து வருகிறார், திண்டுக்கல் மாவட்டம், நிலக்கோட்டை அருகேயுள்ள சிறுநாயக்கன்பட்டியைச் சேர்ந்த சுரேஷ்.

நிலக்கோட்டையிலிருந்து அணைப்பட்டி செல்லும் சாலையில் பதினோராவது கிலோ மீட்டரில் இருக்கிறது, சிறுநாயக்கன்பட்டி. இந்தப்பகுதி முழுக்க, பூ சாகுபடிதான் பிரதானம். மல்லிகை, செண்டு மல்லி, அரளி, சம்பங்கி, கனகாம்பரம்… எனப் பலவிதமான பூக்கள் சாகுபடி செய்யப்படுகின்றன. மலர்களின் மணத்தில் காற்றே கிரங்கிப்போய்தான் வீசுகிறது இப்பகுதிகளில். காற்றில் பயணித்து வந்த வாசத்தை ரசித்தபடியே, சுரேஷின் மல்லிகைத் தோட்டத்தை அடைந்தோம். பரந்தவெளி எங்கும் பசுமையாக மல்லிகைச் செடிகள் விரவிக் கிடக்க.. அதற்கு நடுவே, சுரேஷின் தோட்டத்தில் பசுமைக் குடிலுக்குள் குலுங்கிக் கொண்டிருக்கின்றன. மல்லிகை மொட்டுகள்! அவற்றைப் பறிக்கும் பணியிலிருந்த சுரேஷ், உற்சாகமாகப் பேச ஆரம்பித்தார்.

**எங்களுக்கான ஏ.டி.எம்.. மல்லிகைதான்!**

இங்கு மல்லிகைப் பூவைதான் அதிகமாக சாகுபடி செய்வோம். இதை ஒரு முறை நட்டு வைத்தால் போதும்… 15 வருடத்திற்கு குறையாமல் வருமானம் கொடுத்துக்கொண்டே இருக்கும். அரை ஏக்கர் நிலம் இருப்பவர்கள்கூட மல்லியை நட்டு வைத்துவிட்டு, ஈஸியாக பிழைப்பை ஓட்டிருவாங்க.

மல்லிகைச் செடியை பொறுத்த வரைக்கும் எவ்வளவு பண்டுதம் பார்கிறோமோ அந்தளவுக்கு வருமானம் கியாரண்டி. சுருக்கமாக சொல்ல வேண்டும் என்றால் எங்கள் பகுதி மக்களுடைய ஏ.டி.எம் இந்த மல்லிகைதான். தினமும் 4 கிலோ பூ வந்தாலும், 200 ரூபாய் கிடைத்துவிடும். சீசன் நேரத்தில் தினமும் ஆயிரக்கணக்கில் கையில் புரளும்.

**50 ரூபாய்க்குக் குறையாது!**

'ரூபினா ஜெயந்தி விக்டர்' என்பவர்தான் இந்தத் தோட்டத்தின் சொந்தக்காரர். அவர்களுடைய கணவர் விக்டர் சார்லஸ், ஃபிரான்ஸில் இருக்கிறார். அங்கு பெரிய அளிவல் புர் வியாபாரம் செய்கிறார். இந்தத் தோட்டத்தை அவங்க சார்பாக நான்தான் பராமரித்து கொண்டு இருக்கிறேன். விவசாயத்துடன் சேர்த்து, நிலக்கோட்டையில் பூக்கடையும் வைத்திருக்கிறோம். அதை ஸ்ரீதர், நாகேந்திரன் என்று இரண்டு பேர் பார்த்துக்கொள்கிறார்கள். விவசாயிகளுடன் பூக்களை வாங்கி வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்கிறோம். மல்லிக்கு எப்பவும் கிராக்கி இருப்பதால், எங்களுக்கு ஏற்றுமதி ஆர்டரும் இருந்துகொண்டே இருக்கும். எப்பவும் ஒரு கிலோ பூவுடைய விலை ரூ.50 கீழ் குறையாது. சீசன் நேரமாக இருந்தால், ஒரு கிலோ... ஆயிரம் ரூபாயைத் தாண்டிவிடும்.

சீசன் இல்லாத நவம்பர், டிசம்பர் மாதங்களில் பூ வரத்து இருக்காது. அந்த நேரத்தில் என்ன விலை கொடுத்தும் வாங்க வாடிக்கையாளர்கள் தயாராக இருப்பாங்க. ஆனால், பூ இருக்காது. இது எங்களை யோசிக்க வைத்தது.

'விலை கிடைக்கும் போது விளைந்தால்தானே நான்கு காசு பார்க்க முடியும். அப்போது விளையாமல் விலையில்லாத போது விளைந்து என்ன புண்ணியம் என்று யோசித்த போதுதான் பசுமைக் குடில் தொழில்நுட்ம் (பாலி ஹவுஸ்) பற்றி கேள்விப்பட்டோம். உடனே, தோட்டக்கலைத்துறை அதிகாரிகள், கம்பெனிக்காரங்களிடம் ஆலோசனை செய்தோம். அவர்கள்தான், 'பசுமைக் குடில் அமைத்தால்... பனிக் காலத்திலும் பூ எடுக்கலாம் என்று தைரியம் சொன்னார்கள். அதனால் ஆயிரம் சதுர மீட்டரில் மட்டும் ஒரு பசுமைக் குடில் அமைத்தோம்.

**50% மானியம்! உடனடி வருமானம்!**

பொதுவாக, பசமைக் குடில் அமைப்பவர்கள், குடிலை அமைத்த பிறகுதான் நடவிலிருந்து விவசாயத்தை ஆரம்பிப்பாங்க. அப்படி செய்தால் மல்லிகை மகசூலுக்கு வர 6 மாதம் ஆகும். ஆனால், அதுவரைக்கும் மகசூலை இழக்க எங்களுக்கு மனசு இல்லை. அதனால் ஏற்கனவே மகசூலிலிருந்த மல்லிகை செடிகளை மேலேயே பசுமைக் குடிலை அமைத்தோம் என்று சொன்னார்.

40 சென்ட் நிலத்தில் எட்டு வயதான மல்லிகைச் செடிகளை மேலேதான் இந்த பசுமைக் குடில் நிற்கிறது. ஆயிரம் சதுர மீட்டர் தவிர மற்ற செடிகளை வெட்ட வெளியில் நிற்கிறது. பசுமைக் குடிலுக்குள்ள விவசாயம் செய்ய முடிவுக்கு வந்தவுடனே, இயற்கை முறை விவசாயத்தில் தான் மல்லிகையை உற்பத்தி செய்ய வேண்டும் என்று முடிவு செய்துவிட்டோம். இந்தக் குடிலை அமைக்க ஏழரை லட்ச ரூபாய் செலவானது. தோட்டக்கலைத் துறையிலிருந்து 50% மானியம் கொடுத்தார்கள்.


**செடிகளைச் செழிக்க வைக்கும் நுண்ணீர் பாசனம்!**

இந்தக குடிலுக்குள் சொட்டுநீர்ப் பாசனம், ஃபாகர் (நுண்ணீர் பாசனம்) இரண்டும் இருக்கு. அதே நேரத்தில் வாய்க்கால் வழியாகவும் பாசனம் செய்யும் வசதி இருக்கிறது. பெரும்பாலும், தண்ணீர் இருக்கும் போது

வாய்க்கால் பாசனம் தான் செய்கிறோம். மழைக்கலத்தில் சொட்டு நீரும், வெயில் காலத்தில் ஃபாகரும் போட்டுக் கொள்வோம். இந்த ஃபாகர் போடுவதால் செடிகள் மேல் தூறல் மாதிரி தண்ணீர் விழுவதால் செடிகள் செழும்பா இருக்கு. வெளியில் என்ன மழை, வெயில், பனி அடித்தாலும், பத்து நிமிடம் ஃபாகர் போட்டால் போதும், குடிலுக்குள் மல்லிகைக்குத் தேவையான குறிப்பிட்ட அளவு தட்பவெப்பநிலை வந்துவிடும். அதனால், செடிகள் கொள்ளாத அளவிற்கு மொட்டுகள் வெடிக்கிறது. குடிலுக்கு வெளியில் நிற்கிற செடிக்கும் இந்தச் செடிக்கும் ஒரே வயதுதான். இரண்டிற்கும் ஒரே பராமரிப்புதான் செய்கிறோம். ஆனால், அந்தச் செடிக்கும் குடிலுக்குள் இருக்கும் செடிக்கும் உள்ள வித்தியாசத்தை நீங்களே பாருங்கள் என்ற சுரேஷ், குடிலுக்குள் தளதளவெனவும், வெளியில் சுணங்கியும் இருந்த செடிகளை நம்மிடம் காட்டினார்.

தொழில்நுட்பத்தின் பலன் கண்கூடாகத் தெரிந்தது. நமது வியப்பைப் பெருமையுடன் ரசித்த சுரேஷ், பசுமைக் குடிலுக்குள் இயற்கை முறையில் மல்லிகையை சாகுபடி செய்யும் முறைகளைப் பற்றிச் சொல்லத் தொடங்கினார். அதை அப்படியே பாடமாகத் தொகுத்திருக்கிறோம்.

**நாற்று நடவுதான் சிறந்தது!**



பொதுவாக மல்லிகை அனைத்து மண்ணிலும் வளரும் என்றாலும், செம்மண் நிலங்களில் சிறப்பான மகசூலைக் கொடுக்கும். மல்லிகையை நாற்றுகளாகத்தான் நடவேண்டும். இந்த நாற்றுகள் ராமநாதபுரம் மாவட்டம், தங்கச்சி மடம் பகுதியில் கிடைக்கின்றன. (ஒரு நாற்று

இரண்டு ரூபாய்). புதிதாக நடவு செய்பவர்கள், நிலத்தை நன்றாக உழவு செய்து புழுதியாக்கிக் கொள்ள வேண்டும். பிறகு, 5 அடிக்கு 5 அடி சதுரப் பாத்தி எடுத்து, தண்ணீர் பாய்ச்சி.. பாத்தி ஈரமானதும் நான்கு மூலையிலும் கையால் சின்னக் குழி எடுத்து, மல்லிகை நாற்றை நடவு செய்ய வேண்டும்.

இப்படி நடவு செய்தால் ஒரு ஏக்கர் நிலத்தில் 1,750 நாற்றுகள் முதல் 2 ஆயிரம் நாற்றுகள் வரை நடலாம். சொட்டுநீர்ப் பாசனம் செய்பவர்கள், ஒவ்வொரு வரிசையிலும் இரண்டு பக்கமும் முக்கால் அடி தூரம் உள்ள மண்ணை அள்ளி, கரை போல் அமைத்துக் கொண்டு, அதில் சொட்டுநீர்க் குழாய்களை அமைத்துக் கொள்ளலாம்.

**ஊட்டம் கொடுக்கும் ஜீவாமிர்தம்!**

பசுமைக் குடிலுக்குள் மல்லிகை சாகுபடி செய்ய நினைப்பவர்கள், தேவையான அளவில் பசுமைக் குடிலை அமைத்துக் கொண்டு, அதனுள் ஐந்தடி இடைவெளியில் மேற்சொன்னபடி செடிகளை நட்டு சொட்டுநீர், நுண்ணீர் பாசன வசதிகளை அமைத்துக் கொள்ள வேண்டும். ஏற்கனவே மல்லிகை சாகுபடி செய்வர்கள், செடிகளுக்கு மேலேயே பசுமைக் குடிலை அமைத்துக் கொள்ளலாம். மல்லிகையை நடவு செய்த பிறகு 15 நாட்களுக்கு ஒரு முறை பாசன நீருடன் தேவைக்கேற்ப ஜீவாமிர்தத்தை கலந்துவிட வேண்டும். 3 –ம் மாதம் செடிகளுக்கு 100 கிராம் ஆர்கானிக் உரத்தையும் வைக்க வேண்டும். வாய்க்கால் பாசனம் செய்பவர்கள், 6 மாதம் வரை காய்கறிப் பயிர்களை ஊடுபயிராக சாகுபடி செய்யலாம். 6-ம் மாதத்தில் அரும்புவிடத் தொடங்கி, அடுத்த 20-25 நாட்களில் பூ வரும். அரும்பு கட்டத் தொடங்கும் போது செடிகள் நன்றாக நனையும் வகையில் ஜீவாமிர்தத்தைத் தெளிக்க வேண்டும்.

**வருமுன் காப்பது சிறந்தது!**

ஒரு முறை அரும்பு எடுக்கத்தொடங்கிய பிறகு, தினமும் புதுப்புத மொட்டுகள் தோன்றிக் கொண்டே இருக்கும். செடியின் அனைத்துப் பகுதிகளிலும் மொட்டுகள் தோன்றியதும் மகசூல் ஓய்ந்துவிடும். இப்படி ஒரு சுற்று மொட்டுகள் தோன்றி ஓய்வதை ஒரு 'கன்னி' என்பார்கள். ஒரு கன்னி முடிந்தவுடன் செடிகளை. கவாத்து செய்து, ஒவ்வொரு செடிக்கும் 100 கிராம் ஆர்கானிக் உரத்தையும், 250 கிராம் மண்புழு உரத்தையும் வைக்க வேண்டும். அப்போதுதான் புதுப்புதுக் கிளைகள் தோன்றி, அதிக மொட்டுகள் தோன்றும். கவாத்து செய்த 25-ம் நாள் அரும்பு வெளியே வரும். அடுத்த 20 நாட்களில் பூ எடுக்கலாம் (திறந்தவெளி சாகுபடியில் கவாத்துக்குப் பிறகு, பூ எடுக்க 3 மாதங்கள் ஆகும்) இப்படி ஒவ்வொரு கன்னி முடிந்தவுடனும் கவாத்து, உரம் என்று தொடர்ந்து பராமரித்து வர வேண்டும். பசுமைக் குடிலுக்குள் சாகடி செய்யும் போது, பாச்சிகள் அதிகம் தாக்குவதில்லை. ஒரே தட்பவெப்பநிலை பராமரிக்கப்படுவதால் நோய்களும் தாக்குவதில்லை. இருந்தாலும், ஒவ்வொரு முறை கவாத்து செய்த பிறகும் மூலிகைப் பூச்சி விரட்டியைத் தெளித்து வந்தால், வருமுன் காத்துக் கொள்ளலாம்.

**பனிக் காலத்தில் பூ!**

திறந்தவெளியைவிட. குடிலுக்குள் பராமரிப்புச் செலவு மிகவும் குறைவு. ஒவ்வொரு கன்னி முடிந்த பிறகும், பசுமைக் குடிலுக்குள் திறந்தவெளியில் வருவதைவிட சீக்கிரமாகவே அடுத்த அரும்பு வர ஆரம்பித்துவிடும். காம்பு நல்ல அடர் பச்சை நிறத்தில் திடமாக இருக்கும். வெளியில் பறிக்கும் மொட்டுகள் சீக்கிரம் மலர்ந்துவிடும். ஆனால், குடிலில் பறிக்கும் மொட்டுகள், 4 மணி நேரம் கழித்துதான் மலரும். இதில் முக்கியமான விஷயம்.. திறந்தவெளியில் சாகுபடி செய்யும் போது, பனிக் காலத்தில் (நவம்பர், டிசம்பர், ஜனவரி ஆகிய மாதங்கள்) செடிகளில் பூ இருக்காது. அந்த மூன்று மாதமும் பூ எடுக்கலாம். இந்த முறை

பனிக் காலத்தில் ஊரில் எங்கேயும் பூ கிடைக்கவில்லை. இதே 40 சென்டில் திறந்த வெளியில் இருக்கும் செடிகளிலும் பூ இல்லை. ஆனால், பசுமைக் குடிலுக்குள் எனக்கு பூ கிடைத்தது.

**ஆண்டிற்கு 5 லட்சம்!**

இந்த ஆயிரம் சதுர மீட்டர் இடத்தில் இருக்கும் 200 செடிகளிலிருந்து தினமும் 10 -20 கிலோ வரைக்கும் பூ கிடைக்கிறது. பனிக் காலத்தில் தினமும் 8-10 கிலோ பூ கிடைத்தது. அந்த சமயத்தில் ஒரு கிலோ பூ, ஆயிரத்து 700 ரூபாய்க்கு விற்றது. சராசரியாக மாதம் 200 கிலோ, ஒரு கிலோ ஆயிரம் ரூபாய் என்று வைத்துக் கொண்டாலும், 2 லட்ச ரூபாய் வருமானம். அந்த மூன்று மாதத்திலேயே 5 லட்ச ரூபாய் அளவுக்கு வருமானம் பார்த்துவிடலாம்.

மற்ற நேரங்களில் மாதத்திற்கு 30 ஆயிரம் ரூபாய் வரை கிடைக்கும். ஆக மொத்தம் ஆயிரம் சதுர மீட்டர் பசுமைக் குடிலுக்குள் மல்லிகை சாகுபடி செய்யும் போது வருடத்திற்கு 7 லட்சத்து 70 ஆயிரம் ரூபாய் வருமானமாக கிடைக்கும். இதல், செலவு 2 லட்சத்து 70 ஆயிரம் ரூபாய் என்று வைத்துக் கொண்டாலும், 5 லட்ச ரூபாய் நிச்சயமாக லாபமாக கிடைக்கும். வழக்கமாக ஒரு ஏக்கர் நிலத்தில் மல்லிகை சாகுபடி செய்தால்… செலவு போக மாதம் 10 ஆயிரத்திலிருந்து 20 ஆயிரம் வரைக்கும் லாபமாக கிடைக்கும். இதுவே ஆயிரம் சதுரமீட்டரில் பசுமைக் குடிலை அமைத்தால், மாதம் 40 ஆயிரத்திற்கு குறையாமல் லாபம் எடுக்கலாம்.
எங்க பூ, இயற்கை முறையில் விளைவதால் சந்தையில் எப்பவும் கிராக்கி இருந்து கொண்டே இருக்கிறது என்றார்.

---

தொடர்புக்கு

**சுரேஷ், செல்போன்: 95851 47936**

**ஆதாரம்: பசுமை விகடன் வெளியீடு 10.04.13 www.vikatan.com**